54

# தலைமைத்துவத்திற்கு அவரின் எச்சரிக்கை

## (23:1-12)

*மத்தேயு புத்தகத்தின் அடுத்த மூன்று அதிகாரங்களான, 23 முதல் 25 வரை, கடைசிப் போதனைப் பகுதியான ஐந்தாம் பகுதியை உள்ளடக்கியுள்ளது. முக்கியத்துவம் நிறைந்த இந்த சுவிசேஷப் பிரிவு, வழக்கம் போல் சொல்லப்படுவது போல, "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" என்று நிறைவு பெறுகிறது (26:1; காண்க 7:28; 11:1; 13:53; 19:1). இதில் கர்த்தருடைய கடைசி பொது விவாதக் குறிப்புக்கள் பதிவு பெற்றுள்ளது. (அதிகாரம் 23), மற்றும் அவர் தமது சீஷர்களுக்கு கொடுத்த தனிப்பட்ட உரையாடல்களும் இடம் பெற்றுள்ளன (அதிகாரம் 24; 25), இரண்டு சொற்பொழிவுகள் எருசலேமின் அழிவையும் இறுதி நியாயத் தீர்ப்பையும் ஒன்றுக் கொன்று பிணைப்பதுபோல வசனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.*

*அதிகாரம் 22 ஒரு சாராம்ஸமாக, "மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது, அன்று முதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்வி கேட்கத் துணியவில்லை" என்ற வார்த்தைகளோடு நிறைவுகிறது (22:46). இந்த பேச்சுக் குறிப்பு யூததலைவர்களுக்கென கொடுக்கப்பட்டது என்பது தெளிவு. இதற்குப் பின்பும் அவர்களில் ஒருவரும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லையாதலால், அவர் தமது பேச்சை ஜனங்களிடமாயும் அவருடைய சீஷர்களிடத்திலுமாய்த் திருப்பினார் (23:1). அவர் அநேக தலைப்புகளில் பேசியிருக்கக் கூடும்; ஆனால் சற்று நேரத்துக்கு முன்பு அவர் பெற்ற அனுபவத்திற்குப் பின்பு, தமது உபதேசத்தையும் இந்த யூதமத தலைவர்களான, வேதபாரகர் மற்றும் பரிசேயர்களுடைய நடத்தைகளையும் போதனைகளையும் குறித்து பேசத் தெரிந்து கொண்டார். R. T. France கூர்ந்து கவனித்து, இயேசுவின் எண்ணம், பரிசேயர்களின் சட்டங்களாகிய இரும்பு விலங்கிலிருந்து ஜனங்கள் விடுபடும்படிக்கு தமது எதிர்ப்பை தெரிவிப்பது தான் என்றார்.[1]*

*இயேசுவின் செய்தி மூன்று பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. முதலாவதாக, வேதபாரகரும் பரிசேயரும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக் கொண்டு சரியாக போதிக்கும் வரை ஜனங்கள் அவர்களைப் பின்பற்றலாம் என்றார் (23:1-12); ஆனால் அவர்களுடைய செயல்களின்படியும் நடத்தைகளின்படியும் பின்பற்றாதபடி எச்சரித்தார். தாங்கள் போதிப்பதை அவர்களே பின்பற்றாதபடியால் அவர்களை மாய்மாலக்காரர்கள் என்றார். இயேசு, இந்த நிலை உண்மையானது என்பதை விளக்கமாக வழங்கினார். இரண்டாவதாக, அவர்களின் மாய்மாலத்தினிமித்தம் ஏழு ஐயோக்களை (ஆபத்துக்களை) அறிவித்தார் (23:13-36). மூன்றாவதாக, ஜனங்கள் தம்மை புறந்தள்ளிய*

*தற்காகவும், அவர்கள் மீது வரும் எதிர்கால (ஆபத்து) சம்பவத்துக்காகவும் எருசலேம் பட்டணத்தைக் குறித்து அவர் துக்கத்தை வெளியிட்டார் (23:37-39). கி.பி. 70ல் ரோமர்கள் பட்டணத்தை அழிக்கவிருந்தனர்.*

## கீழ்ப்படியாமல் இருந்து கொண்டே மற்றவர்களை கீழ்ப்படியும்படி கோருதல் (23:1-4)

**1 பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி,**

**2 வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்;**

**3 ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள். சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்.**

**4 சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்கள் மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்.**

***வசனம் 1. இயேசு*** *இந்த பிரசங்கத்தை* ***ஜனங்களையும் சீஷர்களையும்*** *நோக்கி தேவாலயத்தில் செய்தார். அநேகமாக, இன்னமும் அது உணர்ச்சிகரமான வாரத்தின் செவ்வாய்க்கிழமையாக இருந்திருக்க வேண்டும். இயேசுவின் இதையொத்த பேச்சு, லூக்காவில் பதியப்பட்டுள்ளது, பரிசேயர்களுடன் இரவு உணவை புசிக்கையில் நடந்த சம்பவத்தோடே இணைந்து பேசப்பட்டது (லூக்கா 11:37-52). இயேசு தாமே சில வேளைகளில் தமது போதனைகளை, இலேசான மாற்றங்களுடன், தமது போதனைகளைக் கவனிக்கிற கூட்டத்துக்கேற்ப மறுபடியும் திருப்பிப் போதிப்பதுண்டு.*

***வசனம் 2.*** *இயேசு யூதமதத் தலைவர்களின் மாய்மாலத்தை வெளிப்படுத்தினார். ஏனெனில் அவர்கள் வரவிருந்த தேவனுடைய ராஜ்யத்திற்கு ஜனங்களை மனந்திரும்பச் செய்து ஆயத்தப்படுத்த வேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த மனுஷர்களோ தேவனுடைய தீர்க்கதரிசியை (யோவான் ஸ்நானனை)யும் அவனுடைய மேசியாவை (இயேசுவை)யும் புறந்தள்ளினார்கள். இதன் விளைவாக, அவர்களுடைய எதிர்மறை செல்வாக்கு ஜனங்களில் அநேகரும் தேவனுடைய சித்தத்தை புறந்தள்ள வழிசெய்தது.*

***வேதபாரகர்கள்*** *சட்டரீதியான பதிவேடுகளுக்கு பொறுப்பு பெற்ற அரசு அதிகாரிகளாக துவக்கம் பெற்றக் கூட்டம் (1 நாளாகமம் 24:6). சிறையிருப்புக்கு செல்லுவதற்கு முன்பு இந்தப் பதத்திற்கு மார்க்க சம்பந்தம் எதுவும் இருக்கவில்லை. ஆகிலும், சிறையிருப்பின் நேரத்தில் ஒரு விசேஷித்த வேதபாரகர் கூட்டம் எழும்பியது. இந்த மனுஷர் நியாயப்பிரமாணத்தைப் போதிக்கவும் விளக்கம் அளிக்கவும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தார்கள். எஸ்றா இவ்வகையைச் சேர்ந்தவர் (எஸ்றா 7:6, 11, 12; நெகேமியா 8:1, 4, 9, 13; 12:26, 36). வேதபாரகர்கள் வேத வசனங்களை கைகளினால் நகல் எடுப்பதன் மூலம் கணிசமான வேத அறிவைப் பெற்றனர் (2:4ன்*

விளக்கவுரையைக் காண்க).

**பரிசேயர்களின்** தோற்றம் சரியாகத் தெரியவில்லை, ஆகிலும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் கொடுங்கோல் ஆட்சி செய்து கொண்டிருந்த சிரியாவின் ராஜாவாகிய அந்தியோகஸ் எபிபானேஸ், யூதமார்க்கத்தையே ஒழிக்க முயற்சித்த நேரத்தில் இந்தக் கூட்டம் உருவாகியிருக்கலாம். அவன் இஸ்ரவேலை கிரேக்கப் பண்பாட்டிற்கு, குறிப்பாக எருசலேமை, கொண்டு வரப் பிரயாசப்பட்டான்,[2] அந்தியோகஸ்ஸின் படையை மெக்காபியர் புரட்சிப்படை வெளியேற்றியது. மெக்காபியஸ் யூதாஸின் தலைமைத்துவத்தின் கீழ், "ஹேமர்" என்றழைக்கப்படும் ("மெகாபீ" என்றால் "ஹேமர்" [சுத்தியல்] என்று பொருள்), அவனுடைய கூட்டத்தால், எருசலேம் திரும்பப் பெறப்பட்டு தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டது.[3] இந்த சம்பவங்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பரிசேயர்கள் மற்ற யூதர்களிடமிருந்து தங்களை தனிமைப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் நியாயப் பிரமாணத்தின் ஒவ்வொரு விளக்கத்தையும் பின்பற்றிப் போக வகை தேடினாலும், அவர்கள் ஒரு பெரிய கூட்டமாக ஒரு போதும் உருவெடுக்க வில்லை. ஆகிலும் ஒரு காலக்கட்டத்தில் அவர்கள் ஜனங்களிடத்தில் மிகவும் பிரசித்திபெற்ற கூட்டமாக மாறினார்கள் (3:7 ற்கான விளக்கவுரையைக் காண்க).

வேதபாரகரில் அநேகரும் பரிசேயர்களிலிருந்து வந்தவர்களானபடியால், பரிசேயர்களிடமிருந்து வேதபாரகரை பிரிப்பது கடினம். இந்த வசனப் பகுதியில் குறிப்பிடுவது போல, இயேசு பெரும்பாலும் அவர்களை ஒன்றாக இணைத்தே பேசி வந்தார் (5:20; 12:38; 15:1). இந்த 23ம் அதிகாரத்தில் அநேக கடிந்து கொள்ளுதல் குறிப்பிடப்பட்டிருக்கிறபடியால், நாம் பெரும்பாலும் வேதபாரகர் பரிசேயர்களை பொல்லாதவர்களாகக் காண்கிறோம். ஆகிலும், தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்த சிலரின் இருதயம் இயேசுவுக்கும் அவருடைய செய்திக்கும் திறந்திருந்தது (மாற்கு 12:32-34; லூக்கா 7:36; 13:31; யோவான் 3:1, 2; நடபடிகள் 15:5). இருப்பினும், இயேசு அவர்களில் அநேகரை அகந்தையுள்ளவர்களாயும், மாய்மால அரசியல் வாதிகளாயும் வெளிப்படுத்தினார்.

பரிசேயர்களிலிருந்த மாய்மாலத்தை பின்னதாக எழுதப்பட்ட ரபீமார்களின் புத்தகங்களும் குறிப்பிடுகின்றன. எருசலேம் தால்முத்தில் ஏழுவகையான பரிசேயக் கூட்டத்தைக் குறிப்பிடுகிறது:

1. "தோள் கொடுக்கும் - பரிசேயர்," தான் செய்த மார்க்கரீதியான கிரியைகளை தனது தோள்களினால் சுமக்கிறான் [எல்லாரும் காணத்தக்கதாக செயல்படுபவன்].
2. "கொஞ்சகாலம் - காத்திருக்கும் - பரிசேயர்" - "கொஞ்சம் பொறுங்கள், நான் போய் ஒரு மார்க்க சம்பந்தப்பட்ட கிரியை செய்யட்டும்."
3. "கணக்கு வைத்திருக்கும் பரிசேயன்" - தான் கடமைப் பட்ட காரியத்துக்கென ஒரு கிரியை செய்வான், மார்க்க தேவையென ஒரு கிரியை செய்வான், பிறகு ஒன்றுக்கு எதிராக மற்றொன்றை சமன் படுத்துவான்.
4. "கருமி பரிசேயர்" - "நான் இரட்சிக்கக் கூடும் என்று யார் எனக்கு காண்பிக்க முடியும், அதினால் நான் மார்க்க கிரியைகளை நடப்பிக்கக்

கூடும்."

5. "நான் - என்ன தவறை - செய்தேன் - என காட்டுங்கள் பரிசேயன்" - "நான் என்ன தவறு செய்தேன் என்று காட்டுங்கள், அதற்குச் சமமான எந்த மார்க்கரீதியான கடமையையும் நான் செய்கிறேன்."
6. "பயந்துபோன - ஒரு பரிசேயன்," அதாவது, தேவனுக்குப் பயந்தவன்.
7. "அன்பின் - பரிசேயன்," அதாவது, தேவனிடத்தில் அன்புகூருபவன்.[4]

வேதபாரகரும் பரிசேயரும் **மோசேயின் ஆசனத்தில்** [*kathedra*] **வீற்றிருக்கின்றனர்.** யூத ரபீமார்கள் போதிக்கும் போது வழக்கமாக அமர்ந்துதான் போதிப்பார்கள் (காண்க 5:1; 13:2; 24:3; 26:55; லூக்கா 4:20). சில ஜெப ஆலயங்களில் உண்மையிலேயே "மோசேயின் ஆசனம்" என்று ஒன்றை அமைத்திருப்பார்கள். அந்த ஆசனங்கள், மார்பிள் அல்லது உயர்வகை கற்களால் செய்யப்பட்டவை, இவை அநேக இடங்களில் காணப்படுகின்றன: கிரேக்கத் தீவான டேலோஸ், சீரியாவிலுள்ள ட்யூரா ஐரோப்பா, ஹம்மாத் திபேரியு, கோராஸின், இஸ்ரவேலில் உள்ள என்கேதி.[5] கூடிவந்த (யூத) சபையார்களுக்கு போதிக்கும்போது, மார்க்க அதிகாரம் பெற்றது, என்று கருதப்பட்ட ஆசனங்களின் மேல், மதிப்பிற்குரிய ரபீமார்கள் வீற்றிருந்தார்கள். அப்படியொரு அமர்வுக்கு பழைய ஏற்பாட்டில் வசன ஆதாரம் எதுவும் இல்லை. யூதர்கள் தாங்களாக உண்டுபண்ணிக் கொண்ட ஒரு ஸ்தானம் அது. எப்படியிருப்பினும், தேவனுடைய வசனத்தோடு ஒத்துப்போனதாய் கருதப்பட்ட யூதருடைய எந்த உபதேசத்தையும் இயேசு ஏற்றுக் கொண்டு அதற்கு மதிப்பளித்தார்.

**வசனம் 3.** இயேசு தமது சீஷர்களும் ஜனங்களும் வேதபாரகர் பரிசேயருடைய போதனைகள் எதுவாயிருப்பினும் அவைகளைக் **கைக்கொள்ளவும், அவர்களுடைய செய்கைகளின்படியோ செய்யாதிருக்கவும்** சொன்னார். இயேசு பரிசேயர்களின் போதனைகளை பெரும்பாலும் எதிர்த்துப் பேசினார் (5:17-48; 12:1-8; 15:1-20; 16:5-12; 19:1-12). ஆகையால், அவர் அவர்களுடைய போதனைகளை கைக்கொள்ளுமாறு சொன்னபோது, அவர்களுடைய போதனைகள் மோசேயின் பிரமாணத்தை உட்படுத்தினதாயிருக்கும் வரை அவர்கள் அவற்றிற்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற அர்த்தத்தில் குறிப்பிட்டார்.

"மாய்மாலக்காரனைக் குறித்த" இயேசுவின் சிறப்பான விளக்கமளித்தலை அவர், **அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்** என்றார். NIV "அவர்கள் பிரசங்கிப்பதை அவர்களே கைக் கொள்ளுவதில்லை," என்று சொல்லுகிறது. இதே கருத்தை பவுல் மனதில் கொண்டு, பின் வருமாறு எழுதினார்,

> நீ "யூதனென்று" பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்து, தேவனைக்குறித்து மேன்மை பாராட்டி, நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே, நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும், பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், நியாயப்பிரமாணத்தின் அறிவையும்

*சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே, இப்படியிருக்க மற்றவனுக்கு போதிக்கிற நீ உனக்குத்தானே போதி யாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபச்சாரம் செய்யக் கூடாதென்று சொல்லுகிற நீ விபச்சாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில் களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப் பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா? (ரோமர் 2:17-23).*

**வசனம் 4.** வேதபாரகர் பரிசேயருடைய மாய்மாலத்தை விளக்கப்படுத்த இயேசு அநேக உதாரணங்களை முன்வைத்தார். முதலாவதாக, அவர் சொன்னார், **சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின் மேல் சுமத்துகிறார்கள்;**[6] **தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்.** உருவகமாகச் சொல்லப்பட்ட அந்தக்காரியம் அன்றைய வாழ்வில் பொதுவாய் சம்பவிப்பவைகள் தான். லியோன் மோரீஸ் விவரித்து அதைக் கூறுகிறார்:

*பாரமான சுமைகளை கட்டுதல் என்பது மிருகங்களோ அடிமைகளோ சுமந்து செல்ல ஏதுவாக சுமைகளை ஆயத்தப்படுத்துதலைக் குறிக்கிறது; பாதுகாப்பான பெட்டகத்தினுள் வைத்து வெளியிலே அதை கொண்டு போவதற்கு முன் நன்றாக கட்டப்பட வேண்டும். ஆகிலும் கவனக்குறைவாக அதைக் கட்டினால் சுமைகள் பாரத்தைக் கூட்டுவதாகவும் கையாள முடியாமலும் - கொண்டு போக சிரமத்தைக் கொடுப்பதாகவும் செய்யும்.*[7]

“பாரமான சுமைகள்” என்பது நியாயப் பிரமாணத்துடன் சேர்க்கப்பட்ட அநேக கற்பனை (சட்டங்கள்), ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் ஆகியன. வாய்மொழிப் பிரமாணமாகிய இது, நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மிகமிகப் பாரமான சுமையாக இருந்த போதிலும், அநேக யூதர்களால் அவை தேவ கட்டளையாக நம்பப்பட்டது (காண்க நடபடிகள் 15:10). உதாரணமாக, “ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக,” என்பது எவ்வளவு ஒரு எளிய கட்டளை (யாத்திராகமம் 20:8) அதையே மிருந்த பாரமுள்ள ஒரு கட்டளையாக்கக் கூடும்.[8] ஏழாம் நாள் ஓய்வை ஒழுங்குபடுத்துவதாக எண்ணி, யூத ரபீமார்கள் புனைந்த கற்பனைகளை பாகம்பாகமாக எழுதிவைத்தனர். இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஓய்வுநாளை மீறினதாக குற்றஞ்சாட்டப்பட்ட பொழுது, குற்றஞ் சாட்டியவர்கள் தேவனுடைய பிரமாணத்தை சுட்டிக்காட்டிப் பேசவில்லை மாறாக நூற்றாண்டுகளினூடே புகுத்தப்பட்ட மனிதக் கற்பனைகளையே சுட்டிக் காட்டினர் (12:1-8; காண்க யோவான் 5:5-13). இந்த (மனித) சட்டங்களையும் விதிமுறைகளையும் கைக் கொள்ளாதவர்களை தண்டித்தார்கள், இருந்தும் இந்த அரசியல் வாதிகள் அந்த பாரங்களில் ஒன்றையாகிலும் தங்கள் விரல்களினால் கூட தொடமாட்டார்கள். என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லுவதிலே தாங்களே அவைகளை கைக் கொள்ளுவதைக் காட்டிலும் சிறப்பாக செயல்பட்டனர்.

*கட்டுவதும் கட்டவிழ்ப்பதுமாகிய கருத்து பேதுருவிடத்திலும் மற்ற அப்போஸ்தலரிடத்திலும் முன்னொரு தடவை சொல்லப்பட்டது (16:19; 18:18 ஆகியவற்றின் விளக்கவுரையைக் காண்க). இதிலே காணும் மிகப் பெரிய வித்தியாசம் என்னவெனில் அப்போஸ்தலர்களால் கட்டப்பட்ட காரியங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவைகள், பரிசேயர்கள் கட்டியவையோ மனிதனால் உண்டானவை. இயேசுவும் யூத மதத் தலைவர்களுடன் முற்றிலும் எதிர்த்து நின்றார். அவர்களுடைய பாரங்கள் கடினமாயும் சுமையாகவும் இருந்தபடியால், இயேசு தெளிவாக, "என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்றார் (11:30).*

## மற்றவர்களின் நன் மதிப்பைப் பெற நமது நீதியைக் காட்டுதல் (23:5-12)

***5*தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி,**

***6*விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும்,**

***7*சந்தை வெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.**

***8*நீங்களோ ரபீ என்றழைக்கப் படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.**

***9*பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.**

***10*நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார்.**

***11*உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்.**

***12*தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.**

**வசனம் 5.** மலைப் பிரசங்கத்தில், இயேசு பரிசேயர்களின் சுய மேன்மையைக் குறித்து மூன்று உதாரணங்களை கொடுத்திருந்தார்: தருமஞ் செய்தல், ஜெபித்தல், மற்றும் உபவாசித்தல் (6:1-18). **மனுஷர் காணவேண்டும் என்று தங்கள் கிரியைகளை செய்பவர்களைக் குறித்து** அவர் இங்கே வேறு உதாரணங்களைக் கொடுத்தார்.

***அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலப்படுத்தி, வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கினார்கள்.*** "காப்பு நாடாக்கள்" என்பது ஒரு சிறிய தோலினால் ஆன (விரலைவிட சிறிய) பெட்டி, அதில் வசனங்களைக் கொண்டிருந்தது, அதை யூதர்கள் நெற்றியிலும் இடது கையிலும் கட்டிக் கொண்டிருப்பார்கள். Michael J. Wilkins காப்பு நாடக்களைக் குறித்த இரண்டு நிகழ்ச்சிகளை விவரிக்கிறார், அத்துடன் இரண்டு மாற்றம் எதுவும் பெற்றிராத

*காப்புநாடாக்களும் மற்றவைகளின் உடைந்த துண்டுகளும், கும்ரான் 1ம் எண் குகையில் கண்டு பிடிக்கப்பட்டது என்றார். ஒருவகை காப்பு நாடா சுமார் ஒரு அங்குல நீளமுள்ளதாவும், நான்கு மிகச் சிறிய புஸ்தகச் சுருள்கள் நான்கு தடுப்புக்களை கொண்ட பகுதிகளில் வைக்கப்பட்டிருந்தது. அவைகளில் யாத்திராகமம் 13:9, 16; உபாகமம் 6:8; 11:18 ஆகிய வசனங்கள் முறையே ஒவ்வொன்றிலும் எழுதப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட காப்பு நாடாக்கள் முன் நெற்றியில் அணியப் பட்டன. மற்றொரு காப்பு நாடா சுமார் ⅓ அங்குல வடிவில் ஒரே ஒரு அறையை மட்டும் கொண்ட அமைப்புடன் இருந்தது. மிகத் துல்லிய எழுத்துக்களையுடைய நான்கு வசனங்களை உள்ளடக்கிய சுருள் ஒன்று மட்டும் வைக்கப்பட்டிருந்தது. இந்த காப்பு நாடாவை அவர்களுடைய தங்கள் இடது புயங்களில் (கைகளில்) கட்டிக் கொள்வார்கள்.[9]*

*"காப்பு நாடா" எனும் பதம் (phulaktērion) என்பது "பாதுகாப்புக்கருவி" அல்லது "தாயத்து" என்று பொருள்படும். இந்தப் பெட்டிகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட இரண்டு வார்த்தைகள் tefillin, இதன் பொருள் "ஜெபங்கள்," totaphoth என்பது "முன்புற அமைப்பு" என்றும் பொருள்படத்தக்கதாக உபாகமம் 6:8 மற்றும் 11:18ன் அடிப்படையில் கூறப்பட்டது. இந்தக் காப்பு நாடாக்களை அணியும் பழக்கம் தேவனுடைய பிரமாணம் கையின்மேல் கட்டிக் கொள்ளவும் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாக அடையாளமாகவும் இருக்கக் கடவது என்று சொல்லப் பட்ட வசனத்திற்கு ரபீமார்களின் நேரடி பொருள் கொண்ட மொழியாக்கத்தால் வந்தது.[10] தமது ஜனங்களுக்கு முன்பாக தேவனுடைய வசனம் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட ஒரு அடையாள வார்த்தைகள் இவை - அது அவர்களுடைய இருதயங்களிலும் மனதிலும் எப்பொழுதும் இருக்க வேண்டும். தங்களுடைய காப்பு நாடாக்களை அகலமாக்குதல் என்பது, சில யூதர்கள் தேவனுக்கு பெரிய தேவ பக்தியைக் காட்டினார்கள் என்பதாக வெளிப்படுத்தினார்கள். இன்றைக்கும்கூட, பாரம்பரிய யூதர்கள் தோலினால் ஆன பெட்டிகளை அவர்களுடைய நெற்றிகளிலும் புயங்களிலும் (கைகளிலும்) அணிந்து கொண்டு காலை ஜெபநேரங்களிலும் பிற நேரங்களிலும் அணிந்திருப்பார்கள்.*

*"வஸ்திரங்களின் தொங்கல்கள்" (குஞ்சம் வைத்துக் கட்டுதல்) யூதர்கள் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவும் பரிசுத்தமாய் வாழவும் நினைப்பூட்டுதலாயிருந்தன. வஸ்திரங்களின் "தொங்கல்கள்," அல்லது "ஓரங்கள்"* (NRSV), *அவர்கள் அணிந்த ஆடைகளின் ஓரங்களில் வசனங்கள் கூடிய தேவனுடைய உபதேசங்களின் நினைப்பூட்டுதல் அது (எண்ணாகமம் 15:38-40; உபாகமம் 22:12). இயேசுவின் நாட்களில் அவரும் கூட (இந்த வசனங்களில் சொல்லப்பட்ட) வஸ்திரத்தொங்கல் களையுடைய வஸ்திரங்களைத் தரித்திருந்தார் (9:20; 14:36). மாய்மாலம் நிறைந்த பரிசேயர்கள், எப்படியிருப்பினும், தேவனுடைய பிரமாணத்தை நினைவுறுத்தத்தக்கதாக அப்படிப்பட்ட வஸ்திரத் தொங்கலை அணியவில்லை; மாறாக, அவர்கள் அதை மற்றவர்களிடமிருந்து தங்களை பக்திமான்களாய் காட்டி அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் அப்படிச் செய்தார்கள். எந்த அளவுக்கு வஸ்திரத்தின் தொங்கல் நீளமாக இருந்ததோ அந்த அளவுக்கு பக்திமானாகக் காட்டிக் கொண்டனர். இன்றைய மதத்தலைவர்களென கூறிக்*

கொள்வோரின் ஆடைகள் இதற்குச் சமமாயிருக்கிறது.

**வசனம் 6.** கூடுதலாக, இயேசு சொன்னார், அவர்கள் **விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் விரும்பினார்கள்.** ஒரு விருந்து நடக்கும் போது பங்கேற்கும் விருந்தாளிகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்து மேலிருந்து கீழான வரிசைப்படி அமர்வது வழக்கம்.[11] விருந்தளிப்பவனுக்கு மிக அருகில் அமர்வது மிகப்பெரிய கனமானதாகக் கருதப்பட்டது. இன்னொரு நிகழ்வில், முதன்மையான இடத்தை நாடுவதை இயேசு எச்சரிக்கும்படி ஒரு உவமையைப் பயன்படுத்தினார். விருந்துகளில் ஒருவன் முதன்மையான இடத்தில் போய் உட்கார்ந்திருக்கையில், அவனைக் காட்டிலும் "கனத்திற்குரிய ஒருவனை அமரப்பண்ண வேண்டும், நீ வேறு ஒரு இடத்தில் உட்கார்" என்று சொல்லும்போது அவன் தாழ்த்தப்படுகிறான். ஒரு இடத்திலிருந்து ஒருவன் கனமுள்ள இடத்திலே உட்காரும்படி சொல்லப்படுவானாகில், அது அவனைக் குறித்த உயர்ந்த மதிப்பைக் காட்டும் (லூக்கா 14:7-11). "தன்னைத்தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான்" (23:11, 12). யாக்கோபும் யோவானும் இயேசுவின் வலது இடதுபுற ஆசனங்களைத் தேடினர், அவர்களின் சுயஉயர்வை அவர் கடிந்து கொண்டார் (20:20-23).

பழங்கால ஜெப ஆலயங்களில் முன்பகுதியிலோ அல்லது கட்டிடத்தின் மத்தியிலோ மேடை அமைக்கப்பட்டிருக்கும். அந்த மேடைகளின் மேல் (*bēma*) ஒரு மேஜையும் அதின்மேல் அன்றைய வாசகத்துக்குரிய புஸ்தகச் சுருளும் வைக்கப்பட்டிருக்கும் (லூக்கா 4:16, 17), மோசேயின் ஆசனமும் போடப்பட்டிருக்கும் (23:2), அத்துடன் இங்கே குறிப்பிடப்படுகிற முதன்மையான ஆசனங்களும் போடப்பட்டிருக்கும். இந்த ஆசனங்களின் மேல் தொழுகையில் பங்கேற்பவர்களும் குறிப்பிடத் தக்க மதத்தலைவர்களும் வீற்றிருக்கும் "முதன்மையான ஆசனங்கள்" என்று சொல்லப்படும் ஆசனங்கள் இருக்கும். அதே போல, கூடிவருகிற கூட்டத்தாருக்கென தாழ்வான ஆசனங்கள் ஜெப ஆலயத்தின் சுவர்களை ஒட்டி வருகிற வகையில் போடப்பட்டிருக்கும்.[12] கவனத்தைத் திருப்பும் மையப்பகுதியை விரும்பினவர்களையும் இயேசு கடிந்து கொண்டார், முதன்மையான ஆசனத்தை (இடத்தை) நாடினவர்கள் எல்லோரும் தங்களைக் காண வேண்டும் என்று அப்படிச் செய்தார்கள்.

**வசனம் 7.** வேதபாரகரும் பரிசேயரும் **சந்தை வெளிகளில் வந்தனங்களையும், ரபீ என்றழைக்கப்படுவதையும் விரும்பினார்கள்.** இங்கே எதிர்பார்க்கப்பட்ட கனம் கண்டிக்கப்பட்டது. "சந்தை வெளிகள்" பொது ஜனங்கள் கூடி வருகிற ஒரு சமுதாய இடம், அங்கே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வந்தனங்களையும், புகழ்ச்சிகளையும் பெரிதாய் இந்த மதத்தலைவர்கள் அனுபவித்தனர். சாதாரணமாக ஒருவரையொருவர் வாழ்த்திக் கொள்வதைப் பார்க்கிலும் இங்கே சொன்ன வந்தனங்கள் மிக உயர்வாகக் கருதப்பட்டது.

"ரபீ" என்னும் பதம் "என் ஆண்டவனே" அல்லது "எஜமானனே" என்று பொருள்பட ஒரு நியாயப்பிரமாண போதகனுக்குச் கொடுக்கப்பட்ட சிறப்பு மிகுகனத்திற்குரிய பட்டமாகக் கருதப்பட்டது. இயேசுவும் யோவான்

ஸ்நானனும் இந்தப் பட்டத்தில் அழைக்கப்பட்டார்கள் (மாற்கு 9:5; 11:21; யோவான் 1:38, 49; 3:2, 26). இந்த வார்த்தையின் வரலாற்றை Jack P. Lewis பின்வருமாறு நினைவு கூருகிறார்:

> *ரபீ* ("என் போதகரே") எனும் கௌரவப் பட்டம் முதல் நூற்றாண்டில் தான் பயன்பாட்டிற்கு வந்தது. ரபீமார்களின் பாரம்பரிய வரலாறுபடி கமாலியேல் என்னும் போதகருக்குத்தான் முறையாக ரபான் (ரபீ என்பதைக் காட்டிலும் அதிக கனத்துக்குரிய பட்டம்) கொடுக்கப்பட்டது. தால்முத் காலத்தில் ஒரு மாணவன் தன் ஆசிரியரை ரபீ என்று அழைக்கும்படி கோரப்பட்டான்.[13]

**வசனம் 8.** இயேசு தமது சீஷர்கள் மற்ற உடன் விசுவாசிகளுக்கு மேலாக தங்களை **ரபீ,** என்றழைத்து தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்ள வேண்டாம் என்று எச்சரித்தார். யூத மதத்தில், ஒருவர் கடந்து செல்ல வேண்டிய பலதரப்பட்ட பட்டங்கள் சீஷர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன, எனவே ஒரு மாணவனின் நிறைவு குறிக்கோள் தனக்குக் கீழிருக்கும் சீஷர்களுக்கு மேலாகத்தாம் ரபீ எனும் பட்டத்தைப் பெறுவதுதான்.[14] ஆனாலும் இயேசுவைப் பின்பற்றிப் போகிறவர்கள் தனிப்பட்ட ஆசைகளால் நடத்தப்படக்கூடாது.

இயேசு இங்கே போதகர்கள் சபையிலே ஊழியம் செய்யும் நிலையை மதிப்புக் குறைத்து குறிப்பிடவில்லை (நடபடிகள் 13:1; 1 கொரிந்தியர் 12:28; எபேசியர் 4:11; 1 தீமோத்தேயு 2:7; 3:2; 2 தீமோத்தேயு 1:11; எபிரெயர் 5:12). மாறாக, அவர் தமது சீஷர்களை தாழ்மையுடன் நடந்து கொள்ளவும் தமது மகத்துவமிக்க அதிகாரத்தைத் உணர்ந்துகொள்ளவும் வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார். உயர்வுப்பொருளில் சொல்ல வேண்டுமானால், இயேசு மட்டும் உண்மையான (தெய்வீகப்) **போதகர்.** அவரிடத்திலிருந்து மட்டுமே சத்தியம் வருகிறது. மற்ற போதகர்கள் அவர் போதித்தவைகளிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவை பிறருடன் பகிர்ந்து கொள்வது மட்டுமே (28:18-20; யோவான் 14:26; 16:12-15).

பட்டங்கள் மதப்போதகர்களால் தரித்துக் கொள்ளப்பட ஒரு நோக்கம் மட்டுமே பொதுவாகக் காணப்பட்டது: தனிப்பட்ட ஒருவர் தன்னை யாரென்று காட்டிக் கொள்ள உயர்த்திக் கொள்வது. கிறிஸ்தவ **சகோதரருக்குள்** பொதுவான ஸ்தானம் இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார் (காண்க 12:48-50; கலாத்தியர் 3:28). தேவனுடைய ராஜ்யத்தில் எஜமானர்கள் யாரும் இருக்க இயலாது; அதன் பிரஜைகள் யாவரும் ஊழியக்காரர்கள் (20:25-28). சபையில் முதன்மைத்துவம் பெற காட்டப்படும் வழி ஊழியமே. தன்னைத்தானே உயர்த்திக் கொள்ள முயற்சிக்கிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் ஊழியம் செய்யும்படி தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தேவனுடைய மதிப்பீடே உண்மையில் முக்கியமானது.

**வசனம் 9.** இயேசு மதத்தலைவர்களை **பிதா** என்று அழைப்பதைக் கண்டனம் பண்ணினார். இந்தப் பழக்கம் வெகு நாளைய பாரம்பரியமாகும். புராதனக் காலத்து நியாயாதிபதிகள் காலத்திலேயே, ஒரு லேவிய கோத்திர ஆசாரியன் பிதாவாகக் கருதப்பட்டான் (நியாயாதிபதிகள்

*17:10). தீர்க்கதரிசியாகிய எலிசா, தனது அறிவுரையாளனாகிய எலியாவை, "என் தகப்பனே" என்றார் (2 ராஜாக்கள் 2:12). இஸ்ரவேலின் இராஜாக்கள் எலிசாவை அப்படியே அழைத்தார்கள் (2 இராஜாக்கள் 6:21; 13:14). ரபீ மார்களின் காலத்தில், "பிதா" (தகப்பன்) எனும் பட்டம் பிரதானமான ரபீமார்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.[15]*

*உலகப் பிரகாரமான தகப்பன்மார்களை "பிதா" என்றழைப்பது அவர்களுக்கென வைக்கப்பட்ட பட்டம், அதை இயேசு கண்டனம் பண்ணவில்லை (15:4; 19:19; எபேசியர் 6:2; கொலோசெயர் 3:21; எபிரெயர் 12:9). சிலரை தான் சுவிசேஷத்தின்படி பெற்றெடுத்ததாக உருவகமாக பவுல் தன்னைத் தகப்பன் என்று சொன்னார் (1 கொரிந்தியர் 4:15; 1 தீமோத்தேயு 1:2; 2 தீமோத்தேயு 1:2; தீத்து 1:4). பேதுரு தனது உறவு முறைக் கண்ணோட்டத்தில் மாற்குவை, தனது செட்டையின் கீழ் அரவணைத்து, அதே முறையில் அழைக்கிறார் (1 பேதுரு 5:13). யோவான் அப்படிப்பட்ட சகோதரர்களைக் குறிப்பிட்டு "என் பிள்ளைகளே" என்றும், "சிறு பிள்ளைகளே" என்றும் அழைத்தார் (1 யோவான் 2:1, 12, 18, 28; 3:7, 18; 4:4; 5:21). ஏவப்பட்ட இந்த மனுஷர்களெல்லாம் ஒருபோதும் ஏதோ ஒரு பட்டத்துடன் அழைக்கப்பட்டதில்லை. ஒரே ஒரு ஆவிக்குரிய **பிதா** மட்டுமே நமக்கு உண்டு, அது "பரலோகத்திலிருக்கிற எங்கள் நம்முடைய பிதா" (6:9; காண்க 5:48; 6:14, 26, 32; 15:13; 18:35).*

***வசனம் 10.*** *வசனம் 8ல் கூறப்பட்ட உணர்ச்சிக்கு ஆட்பட்ட தன்மை வசனம் 10ல் திரும்பப் பேசப்படுகிறது.* **குரு** *எனும் இந்த கிரேக்கச் சொல் (kathēgētēs) புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதம் பல்வேறு சொற்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "எஜமான்" (KJV), "போதகர்" (NKJV), "கற்பிப்பாளர்" (NRSV). "போதகர்" என்னும் சொல் (didaskalos) மிக அருகாமையிலுள்ள பொருளைக் கொடுக்கிறது. "குரு" எனும் பதம்* **கிறிஸ்து** *ஒருவருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட பட்டம். அவர் மட்டுமே ஆவிக்குரிய தலைவர், அவருடைய உபதேசங்கள் மட்டுமே பின்பற்றப்பட வேண்டும். ஒரு வகையில், மற்றவர்களும் அவருடைய வார்த்தைகளைப் போதிக்கும் போதகர்களாக இருக்கலாம்.*

*வசனங்கள் 8 லிருந்து 10 வரை, குறிப்பிட்ட சில ஜனங்களை மற்றவர்களுக்கு மேலாக உயர்த்தும் மனித இயல்பை, இயேசு எதிர்த்தார். அவர் தமது சபையில் உயர்வு தாழ்வுகளுக்கு எதிரானவர். ஒரே உயர்வு அவருடைய சபையில் அவர் தலையாயிருக்கிறார், தேவன் பிதாவாயிருக்கிறார்.[16]*

***வசனங்கள் 11, 12. உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன், தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்*** *என்ற வார்த்தைகளைக் கூறி இயேசு இந்தப் பகுதியை முடித்தார். மனுஷருடைய புகழ்ச்சிகளைப் பெறும் பொருட்டு தங்களைத் தாங்களே உயர்த்தி, தங்களுக்குத்தாங்களே ஊழியஞ் செய்து கொள்ளும் பரிசேயரைப் போலிருக்க வேண்டாம் என்று இந்த வார்த்தைகள் ஜனங்களை எச்சரிக்கின்றன. வசனம் 11ல் பேசப்படும் வார்த்தை நடை 20:26ல் ஏற்கனவே சொல்லப்பட்டவைகளை அடையாளப்படுத்துகின்றன: "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்."*

வசனம் 12ல் சொல்லப்பட்ட சாராம்ஸக் கருத்து அடிக்கடி வசனங்களில் காணப்படுகிறது. (நீதிமொழிகள் 29:23; லூக்கா 14:11; 18:14; பிலிப்பியர் 2:6-9; யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5, 6). பின்னதாக தால்முத்தில் இந்தச் சொற்றொடர் திரும்பச் சொல்லப்படுகிறது: "பரிசுத்தமானவருக்கு தன்னைத் தாழ்த்துகிற எவனும், பாக்கியவான், அவன் உயர்த்தப்படுவான், தன்னைத்தான் உயர்த்துகிறவன் பரிசுத்தருக்கு முன்பாக, பாக்கியவான், அவன் தாழ்த்தப்படுவான்."[17]

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## உண்மையான மார்க்கம்
## (அதிகாரம் 23)

மத்தேயு 23ம் அதிகாரம் பெரும்பாலும் "ஐயோ" அதிகாரம் என்றழைக்கப்படுகிறது. ஏனெனில் இயேசு அத்தப்பதத்தை உபயோகித்தார் (23:13, 14, 15, 16, 23, 25, 27, 29). வார்த்தையாகிய *ouai*, "ஐயோ" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யூத மதத்தலைவர்களின் ஆவிக்குரிய நிலைமையைக் குறித்த கர்த்தருடைய வருத்தத்தை அது காட்டுகிறது, அத்துடன் அவர்கள் மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பும் உறுதியளிக்கப்பட்டது. வேதபாரகரும் பரிசேயரும் பக்தி வைராக்கியம் உள்ளவர்களாயிருந்தனர், ஆகிலும் தேவனுக்கு ஏற்புடைய பக்திக் குறைவு அவர்களிடத்திலிருந்தது. இந்த அதிகாரத்தில் உண்மையான பக்தியைப் பெற ஏதுவான ஐந்து பாடங்களைக் காணலாம்.

1. *நீதியற்ற கிரியை பக்திபோல் காட்சியளிக்கலாம்* (23:1-12). பரிசேயர்கள் அநேக மார்க்க சம்பந்தப்பட்ட (பக்திக்குரிய) கிரியைகளை செய்துள்ளனர். ஆகிலும் அவைகளில் பெரும்பாலானவை மனுஷர்கள் காணவேண்டும் என்பதற்காகவே செய்யப்பட்டவை. அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கினார்கள். அவர்கள் அதிகாரத்தையும் பதவிகளையும் போதிக்கிறதில் கிடைக்கும் ஆதாயத்தையும் அதிகமாய் விரும்பினார்கள், இந்த விருப்பத்தில் கனத்துக்குரிய ஆசனங்களும் தெய்வீக மதிப்பிற்குரிய பட்டங்களும் உள்ளடக்கியது. இவற்றின் பின்னணியில் இருந்த உள்நோக்கம் அவைகளை மதிப்பற்றதாக்கியது.

2. *பயனற்ற செயல்களையுடைய பக்தி* (23:13, 15). உண்மையில், அப்படிப்பட்ட செயல்கள் ஆபத்தானதும் கூட. மக்களை மனமாற்றுவதில் அதிகப் பிரயாசப் பட்டார்கள். இதன் முடிவின் விளைவு, எப்படியிருப்பினும், மனமாற்றப்பட்டவர்கள் அவர்களை மனமாற்றியவர்களை விட அதிகமாக கெட்டுப் போனவர்களாயிருந்தார்கள்.

3. *நிறைவற்ற பக்தியுடன் கூடிய பக்தி செயல்கள்* (23:23). சிறிய விஷயங்களில் கூட பரிசேயர்கள் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்காக இயேசு அவர்களை கடிந்து கொள்ளவில்லை. யூதர்கள், தோட்டத்து புல் விதைகளிலிருந்து வாசனைத் திரவியங்கள் வரை அனைத்திலும் தசமபாகம் செலுத்தினர் என்பது நல்ல விஷயம்தான். மாறாக, சிறிய விஷயங்களில் மட்டுமே பெரிய காரியங்களாக செயலாற்றினர்

என்பதையே கடிந்து கொண்டார். மிக அற்பமான காரியங்களைக் கூட அதிகமாய் வலியுறுத்தின அவர்கள் முக்கியமானவைகளை புறந்தள்ளினர்: நீதி, இரக்கம், விசுவாசம்.

4. *ஒருவரது செயல் பக்தி காட்சியாகவும் உயர்நோக்கு உடையதாகவும் காணப்படலாம், ஆனால் அவைகள் செயல்படுத்தப்படாவிட்டால் பிரயோஜனம் எதுவுமில்லை* (23:29-36). பரிசேயர்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளை கனம் பண்ணினார்கள், அவர்களுடைய முற்பிதாக்கள் அவர்களை கொலை செய்திருந்தார்கள்; ஆகிலும் அவர்களுடைய இருதயங்கள் மாறியிருக்கவில்லை. மேலும் அந்த நேரத்தில் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட எல்லாரையும் தவறாக நடத்தி - இயேசுவையும் சீஷர்களையும் கூட கொன்றார்கள்.

5. *பக்தி காரியங்களில் ஈடுபாடு கொண்டும் தவறான செயலையுடையோர் எப்பொழுதும் தவறிலே நிலைத்திருக்க வேண்டுவதில்லை* (23:37-39). அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் சீர்பொருந்தலாம். கர்த்தரை சதா காலமும் புறந்தள்ளிய நிலைமையிலேயே இருப்பது பயப்படத்தக்கது, ஆகிலும் எந்த ஒருவரும் இரட்சிக்கப்படாத நிலையில் தரித்திருக்க வேண்டிய அவசியமில்லை.[18]

## பரிசேயர்கள் (அதிகாரம் 23)

பரிசேயர்களின் ஆரம்ப எண்ணம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிதலை கிரேக்கக் கலாச்சாரத்தின் தாக்கத்துக்கு விட்டு விடாமல் பாதுகாப்பது தான். "பரிசேயன்" அல்லது "பிரித்தெடுக்கப்பட்டவன்" என்பது பாவத்திலிருந்து பிரிந்து வாழ்வதைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைத்து பாதுகாக்க நினைக்கிற எவரும் அவர்களுடைய மேன்மையான கண்ணோட்டத்தைப் பாராட்டக் கூடும். இருப்பினும், இயேசு அநேகக் காரணங்களுக்காக அவர்களைக் கடிந்து கொண்டார். அதே வகையான தவறுகளைச் செய்யாதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

1. *அவர்கள் போதித்தவைகளை அவர்களே கைக்கொள்ள வில்லை (23:2, 3).*
2. *அவர்கள் தங்களுடைய பாரம்பரியங்களை தேவனால் கொடுக்கப் பட்ட கட்டளைகளைப் போல் மற்றவர்கள் மேல் சுமத்தினார்கள் (23:4; காண்க 15:1-9).*
3. *தேவனிடத்திலிருந்து வருகிற நற்பெயரைக் காட்டிலும் மனுஷரிடத்தி லிருந்து வருகிற நற்பெயரை அதிகமாய் விரும்பினர் (23:5-7).*
4. *ஜனங்களை தேவனிடத்திற்கு மனந்திரும்பச் செய்வதைக் காட்டிலும் தங்களிடமாய்த் திருப்புவதை செயல்படுத்தினர் (23:13, 15).*
5. *தங்களுக்கு வசதிப்படும் போது மட்டுமே தங்களுடைய வார்த்தையை காத்துக்கொள்ள முற்பட்டனர் (23:16-22).*
6. *தொழுகையின் சடங்காச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த அவர்கள் "மாசில்லாத சுத்தமான பக்திக்கு" புதியவர்களாயிருந்தனர் (23:23, 24; காண்க 25:34-46; யாக்கோபு 1:27).*
7. *வெளிப்புறத் தோற்றத்தில் நீதிமான்களாய்த் தங்களைக் காட்டிக்*

கொண்ட அவர்களின் உள்ளான மனம் புதிதாக வில்லை (23:25-28).

8. அவர்கள் கண்மூடித்தனமாய்த் தங்களுடைய பிதாக்களின் பாவங்களைத் திரும்பவும் செய்து கொண்டிருந்தார்கள் (23:29-36).

டேவிட் ஸ்டீவர்ட்

## இன்றைய பரிசேயம் (23:1-12)

கிறிஸ்தவர்கள் பரிசேய மனம் படைத்தவர்களாய் தங்களை அனுமதியாமல் காத்துக்கொள்ள வேண்டும். பக்திக்குரிய காரியங்களை உள்ளே (மனதில்) வையாமல் புறம்பே காட்டுவது மிகச் சுலபம். ஒருவர் "ஞாயிற்றுக் கிழமைகளில்" தன்னிடமுள்ள "சிறப்பானதை" தரித்துக் கொள்ளலாம் ஆனால் இருதயத்தை தொழுகைக்கு ஆயத்தப்படுத்த மாட்டார். ஞாயிற்றுக் கிழமைகளில் நல்ல ஆடைகளைத் தரித்து கொள்ளாமல் கூட்டத்தில் இருப்பவர்களை அவர் ஏளனமாகப் பார்க்கலாம் (யாக்கோபு 2:2-4).

ஜெபிக்கிற பொழுது தாழ்மையுடன் தன் தேவனிடத்தில் பேசுவதற்குப் பதிலாக உள்ளூர் சபையார்கள் தன்னைக் குறித்து நன்மதிப்பு கொள்ள வேண்டும் என்பதில் அக்கரையுள்ளவராயிருப்பார். மற்றவர்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் நீண்ட ஜெபங்களை பார்வைக்காக ஜெபிப்பார்கள். சபையின் ஆராதனையில் தன்னை நீதிமானாய் முன்னிறுத்தி வாரம் முழுவதிலும் தனது ஒழுக்கக் காரியங்களில் களிப்புற்று இருப்பார். பரிசேய மனதுடையவர் தனது முக்கியத்துவத்தைப் பற்றியே பறைசாற்றிக் கொண்டிருப்பார். ஒரு அறைக்குள் பிரவேசிக்கையில், மற்றவருடைய தேவையை அறிந்து ஊழியஞ்செய்வதற்குப்பதிலாக மற்றவர்களுடைய கவனத்தை தன் பால் திருப்ப வேண்டும் என்பதே அவரின் குறிக்கோளாயிருக்கும். இதன் சாராம்ஸமாக, "அதோ அங்கே நீங்கள் இருக்கிறீர்கள்" என்று சொல்லுவதற்குப் பதில், "இதோ நான் இங்கே இருக்கிறேன்" என்று சொல்லுவார்.

டேவிட் ஸ்டீவர்ட்

## உயர்த்திக் கொள்ளும் பட்டங்கள் (23:8-10)

அநேக மார்க்கக் கூட்டங்கள் உயர்த்திக் கொள்ளும் பட்டங்கள் குறித்த கிறிஸ்துவின் போதனையை அறியாதவர்களாயிருக்கின்றனர். கத்தோலிக்க பாரம்பரியங்களில், தங்களுடைய மதத் தலைவர்களை பொதுவாக "தந்தை" என்று குறிப்பிட்டு பாவமன்னிப்பைத் தங்களுக்குக் கொடுக்க அவர்கள் பரிந்துரைப்பதாக எண்ணுகின்றனர். "சமயக் குருவின் வட்டாரப் பகுதி" என்றழைக்கும் அந்த வட்டத்துக்குள் இருப்போர் சில நேரங்களில் பாவசங்கீர்த்தனை செய்வதாகச் சொல்லி பாதிரியாரிடத்தில் சொல்லுவார், "என்னை மன்னியுங்கள் தந்தையே [fathers] நான் பாவம் செய்தேன்," இந்த விஷயத்தில், "தந்தை" (fathers) எனும் பட்டம், பாதிரியார் பணியைச் செய்தல், செயற்கையான மதத்தலைவர்கள் - திருச்சபை மக்கள் எனும் உயர்வு தாழ்வை ஏற்படுத்துகிறது, இது சகோதரத்துவத்துக்கு முரணானது (23:8). மாறாக, கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களை ஒருவருக்கொருவர் மன்னித்து

ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டியவர்கள் (யாக்கோபு 5:16). பிதாவாகிய தேவன் தாம் பாவத்தை மன்னிக்கிறார்.

புரட்டாஸ்டண்ட் பாரம்பரியத்தில், "reverend" எனும் பதம் பெரும்பாலும் அதின் ஊழியர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. "Reverend" எனும் பதம் ஆங்கிலத்தில் KJV யில் ஒரே ஒரு முறை சங்கீதம் 111:9ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனமும், தேவனைக் குறிப்பிட்டு, "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" (reverend), என்று சொல்லப்படுகிறது, தேவனுடைய பெயர் "Reverend," என்று அது கூறவில்லை நியாயப்பிரமாணம் கட்டளையிட்டபடி, அவருடைய நாமம் பயப்படத்தக்கது (யாத்திராகமம் 20:7) அப்படிப்பட்ட பயப்படத்தக்க நாமம் வேறு எந்த நபருக்கும் கொடுக்கப்படவில்லை.

## பட்டங்கள் (23:8-10)

பட்டங்களுக்கு எதிரான கிறிஸ்துவின் தடைகள் மூன்று குறிப்பிடத்தக்க பிரச்சனைகளை வெளிப்படுத்துகிறது.

1. *கற்றுத் தேர்ந்ததாக அகந்தை.* நாம் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டியவர்கள்தான், ஆகிலும் இயேசுவே உண்மையான போதகர் எனும் கருத்தைத் தாழ்த்திவிடக் கூடாது (23:8).

2. *மார்க்கத்தில் உயர்மக்கள்.* இளமைக் கிறிஸ்தவர்களை நாம் போஷித்து பாதுகாப்பது அவசியமானது, ஆகிலும் தேவனே நமது பரலோகத்தின் பிதா எனும் தன்மையை நாம் ஒரு போதும் தாழ்த்தி விடலாகாது (23:9).

3. *அதிகாரத்துவத்தின் ஆதிக்கம்.* நாம் மற்றவர்களை இன்னும் அதிகமாக வளர்ச்சி பெற்ற சீஷர்களாகத்தக்க வகையில் வழிநடத்த ஆவல் கொள்ள வேண்டும், ஆனால் இயேசு கிறிஸ்து மட்டுமே தமது சபைக்குத் தலையானவர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது (23:10)[19]

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 323. சீஷர்கள் பரிசேயர்களைக் கண்டு ஆச்சரியப்படடார்கள் என்கிற உண்மையே இயேசு இதற்கு முந்தைய நிகழ்ச்சியில் அவர்களை இடறலடையச் செய்தார் என்பதில் அக்கரை செலுத்தினர் என்பதற்கு சாட்சியமளிக்கிறது (15:12). [2]1 Maccabees 1:20–64. [3]Ibid., 4:36–58. [4]Jerusalem Talmud *Sotah* 5.5; காண்க *Berakoth* 9.5; Talmud *Sotah* 22b. [5]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 140. வில்கின்ஸ் கோராஸின் மற்றும் டெலோஸின் ஆகிய இடங்களின் இருக்கைகளை படங்களுடன் வெளியிட்டிருந்தார். [6]சில மூலப்பிரதிகளில் கூடுதல் சொற்றொடராக, "சுமக்கக் கூடாத" என்பது சேர்க்கப்பட்டுள்ளது (காண்க KJV). இந்தச் சொற்றொடர் ஒருவேளை பார்த்தெழுதின வேதபாரகனின் மோலோட்டமான கண்ணோட்டத்தாலே அல்லது லூக்கா 11:46 லிருந்து சேர்க்கப்பட்டதாகவோ இருந்திருக்கலாம். (Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 2d ed. [Stuttgart: German Bible Society,

1994], 49.) [7]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 573. [8]*யாத்திராகமம் 16:29; 23:12; 31:13-17; 35:2, 3; லேவியாராகமம் 26:34, 35; எண்ணாகமம் 15:32-36; உபாகமம் 5:12-15.* [9]Wilkins, 141. [10]*காண்க* Josephus *Antiquities* 4.8.13; *Letter of Aristeas* 159.

[11]*எண்ணிறைந்த உதாரணங்களை மத்தியத்தரைக்கடல் உலகில் நடந்ததாக மேற்கோள் காட்டுகிறார்* Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 542–43. [12]William Sanford LaSor and Tamara C. Eskenazi, "Synagogue," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:680. [13]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 110; *காண்க* Talmud *Berakoth* 3a; *Baba Kamma* 73b. [14]Wilkins, 142. [15]*காண்க* Mishnah *Peah* 8.5; Talmud *Berakoth* 6a; Jerusalem Talmud *Besah* 1.7; *Genesis Rabbah* 12.14. *"தந்தை" என்பதற்கு அராமிக் பதம் abba (ரோமர் 8:15). மிஷ்னாவில் ஒரு கைப்பிரதி Aboth, "தந்தைகள்." அது ரபீமார்களின் ஞானமுள்ள வார்த்தைகளிலிருந்து தொகுக்கப்பட்டவை.* [16]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 215. [17]Talmud *Erubin* 13b. [18]Adapted from Jack Wilhelm *RSVP Newsletter* (1991). [19]Wilkins, 143.